25.3.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### அரசு கொள்முதல் நிலையங்களில் நெல் விற்பனை செய்ய மார்ச் 31 வரை வாய்ப்பு

ராமநாதபுரம் மாவட்ட அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மார்ச் 31-ஆம் தேதிக்குள் நெல்லை விற்பனை செய்து பயனடையுமாறு ஆட்சியர் க.நந்தகுமார் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். அவரது செய்திக் குறிப்பு: ராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல்லுக்கு உரிய விலை விவசாயிகளுக்கு கிடைக்கும் பொருட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 10 வட்டாரங்களில் உள்ள 39 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களிலும், கூட்டுறவுத் துறை மூலம் செயல்படும் 6 மையங்களிலும் 14.1.2015 முதல் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது ராமநாதபுரம் மாவட்டத்தில் அறுவடைப்பணிகள் முடிவடைந்துள்ளதால் மார்ச் 31-ஆம் தேதியுடன் அனைத்து அரசு நெல் கொள்முதல் நிலையங்களும் மூடப்படவுள்ளன. விவசாயிகள் தங்கள் கைவசம் இருப்பில் உள்ள நெல்லை அரசு நிர்ணயம் செய்த விலைக்கு விற்பனை செய்து பயன்பெற்றுக் கொள்ளுமாறு,தெரிவித்துள்ளார்.

### கனாக்கம்பையில் தேயிலை கொள்முதல் மையம் திறப்பு

கோத்தகிரியை அடுத்துள்ள கனாக்கம்பை கிராமத்தில், பசுந்தேயிலை கொள்முதல் மையம் திறப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது. தென்னிந்திய தேயிலை வாரியம் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, தேயிலை வாரிய கோத்தகிரி உதவி இயக்குநர் ஜார்ஜி சாமுவேல் தலைமை வகித்தார். தேயிலை வாரிய இயக்குநர் செளந்தர்ராஜன், துணை இயக்குநர் ஹரிபிரசாத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், தேயிலை வாரியத் தலைவர் சித்தார்த், முதன்மை

செயல் இயக்குநர் அம்பலவாணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று கொள்முதல் மையத்தை திறந்து வைத்து விவசாயிகளிடமிருந்து பசுந்தேயிலையை பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில், இண்டிகோ தலைவர் சிவசண்முகம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

சிதம்பரம் அருகே வலசக்காடு கிராமத்தில் அவதார் பிராணிகள் நல அமைப்பு சார்பில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஊராட்சித் தலைவர் ஆர்.இந்திரா தலைமை வகித்தார். துணைத் தலைவர் ராமலிங்கம் முன்னிலை வகித்தார். சோழத்தரம் கால்நடை மருத்துவர் எம்.கணேசன், மருத்துவ உதவியாளர் மகாராஜன், நங்குடி கால்நடை ஆய்வாளர் கௌசல்யா ஆகியோர், முகாமில் 500-க்கும் மேற்பட்ட மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. அவதார் பிராணிகள் நல அமைப்புத் தலைவர் சி.எஸ்.பாலசுந்தரம், செயலர் கே.சக்திவேல், துணைச் செயலர் வி.வெள்ளைராஜா, உறுப்பினர்கள் எம்.வேல்முருகன், எஸ்.வரதராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வம்பனில் முந்திரி சாகுபடி கருத்தரங்கு**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் மாவட்ட அளவிலான விவசாயிகளுக்கு முந்திரி சாகுபடி குறித்த கருத்தரங்கு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையம், கொச்சி முந்திரி மற்றும் கோக்கோ மேம்பாட்டு இயக்ககம் இணைந்து நடத்திய கருத்தரங்கை மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ் தொடக்கிவைத்துப் பேசியது: தமிழகத்தில் முந்திரி சாகுபடி அரியலூர், கடலூர் மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக புதுக்கோட்டை மாவட்டத்தில் அதிக சாகுபடி செய்யப்படுகிறது. நமது மாவட்டத்தில் ஹெக்டேருக்கு 314 கிலோ மட்டுமே கிடைக்கிறது. அதனால், விவசாயிகள் உயர் விளைச்சல் தரக்கூடிய நவீன ரகங்களின் ஒட்டுக்கன்றுகளை பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெற வேண்டும். மேலும், முந்திரி பழங்களை பதப்படுத்தி,மதிப்பு கூட்டி விற்கும் தொழிலில்

ஈடுபட வேண்டும். கருத்தரங்கில் பங்கேற்ற விவசாயிகள் வேளாண் அலுவலர்களின் அறிவுரையை பெற்று கூடுதல் மகசூல் ஈட்ட வேண்டும் என்றார் அவர். மேலும்,மலரும் வேளாண்மை மாத இதழ் ஆண்டு விழாவையொட்டி நடைபெற்ற பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்ற விவசாயிகளுக்கு பரிசு, சான்றிதழ்களை ஆட்சியர் வழங்கினார், வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கொடி அவரையில் கோடி லாபம்</u>**



மலைப்பிரதேசங்களில் காப்பி, தேயிலை, ஏலக்காய் போன்றவற்றை பயிரிட்டால் நல்ல லாபம் ஈட்ட முடியும் என்ற கண்ணோட்டம் விவசாயிகளிடம் இருந்தது. அது படிப்படியாக மாறி வருகிறது. தற்போது மண்ணின் தன்மைக்கு ஏற்ப புதுப்புது ரகங்களை பயிரிட்டு மலை விவசாயிகள் சாதனை படைத்து வருவது பாராட்டுக்குரியது. திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலையில் காப்பி, ஏலக்காய் விவசாயத்தை அடுத்து தோட்டக்கலைத்துறை பரிந்துரைத்துள்ள காரட், பீன்ஸ், நூக்கல், பீட்ரூட், முட்டைகோஸ், முள்ளங்கி, பீன்ஸ் வகைகள் விளைவிக்கின்றனர். இவை விவசாயிகளுக்கு லாபத்தை ஈட்டித்தருகின்றன. திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை, தென்மலை பகுதிகளில் சவ் சவ்வை அடுத்து கொடி அவரை விவசாயத்தில் பலர் ஆர்வம் காட்டுகின்றனர். கொத்துக்கொத்தாக... நீளமாக காய்க்கும் மலைக்கொடி

அவரையின் ருசியே அலாதி தான். தென்மலை விவசாயி வி.எஸ்.பழனியாண்டி கூறியதாவது: ஆண்டு தோறும் நவம்பர் இறுதி வாரம் அல்லது டிசம்பர் துவக்கத்தில் கொடி அவரை பயிரிடுவோம். மூன்று மாதங்களில் காய்கள் பறிக்கலாம். இங்குள்ள மண்ணின் காரத்தன்மைக்கு சவ்சவ் நன்றாக விளையும். ஆனால் கொடி அவரை விளையுமா என துவக்கத்தில் சந்தேகம் இருந்தது. எனினும் ஒரு ஏக்கரில் பயிரிட்டதில் நன்றாக காய்த்தது. ஏக்கருக்கு ரூ.ஒரு லட்சம் கிடைத்தது. டீசல் பம்புசெட் மூலம் கிணற்று நீர் எடுத்து பயிர்களுக்கு பாய்ச்சுகிறேன். உரம், பூச்சிக்கொல்லி மருந்து, கூலி ஆட்கள், டீசல் செலவை கணக்கிட்டால் ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் மட்டுமே லாபம் கிடைக்கிறது. தற்போது ஐந்து ஏக்கரில் கொடி அவரை பயிரிட்டுள்ளேன். இரண்டு நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். கிணற்றில் தண்ணீர் ஊறி கொண்டே இருந்தால் கொடி அவரையில் கோடி ரூபாய் லாபம் பார்க்கலாம் என்றார். மேலும் விபரமறிய 93803 96873ல் ஹலோ சொல்லலாம்.

**-கா.சுப்பிரமணியன், மதுரை**

## <u>*சின்ன சின்ன செய்திகள்*</u>



**சப்போட்டாவை பழுக்க வைத்தல்**: சப்போட்டா பழங்கள் பூத்ததிலிருந்து 4-5 மாதங்களில் அறுவடைக்கு வரும் சப்போட்டாவின் காய்கள் முதிர்ச்சி அடைந்ததை அறிந்து கொள்ள தோலில் எந்த மாற்றங்களும் ஏற்படுவதில்லை. முதிர்ச்சி அடைந்த காய்கள் ஓரிரு மாற்றங்களைக் கொண்டு முதிர்ச்சி அடைந்த நிலை எனக் கண்டறிந்து பறிக்கப்படுவது பழக்கத்தில் உள்ளது. சப்போட்டா பறித்தவுடன் பழமாக உண்ணும் நிலையில் இருப்பதில்லை. காலை நேரத்தில் சப்போட்டா காய்களில் அதிகமாகப் பால் இருப்பதால் (Latex) பிற்பகலில் பறித்து பழுக்க வைப்பது சிறந்தது. பறித்தவுடன் காய்களின் காம்பிலிருந்து பால் வடியும். காய்களை அதிகப்பாலுடன் பழுக்க வைத்தால் சரிவர பழுக்காமல் சேதமேற்படும். ஆகவே பறித்த காய்களை சாக்குபடுதாவின் மேல் பரப்பி இளம்

வெயிலில் அரைமணி நேரம் வைத்தால் காய்களில் உள்ள பால் குறைந்து விடும். சிறிதளவு காயவைத்த காய்களை வைக்கோல் பரப்பிய மூங்கில் கூடைகளில் அடுக்கி கூடையின் மேல் பகுதியை மூங்கில்தட்டி அல்லது சாக்குப்பை பயன்படுத்தி இருக்கமாக மூடிவிடவேண்டும். கூடையிலுள்ள காய்கள் 3-4 தினங்களில் பழுத்து நுகர்வோருக்கு விற்பனை செய்யக்கூடிய பழமாக இருக்கும் சப்போட்டா பழுத்தபின் ஓரிரு நாட்களே உண்பதற்கான நிலையில் இருக்கும். பிறகு சுவை குன்றி அழுகி விடும். பழுத்த பழங்களை குளிர்சாதனை அறைகளில் 0 டிகிரி சென்டி கிரேடு முதல் 1.7 டிகிரி உள்ள சீதோஷ்ண நிலையில் 2 முதல் 4 வாரம் வரை நல்ல முறையில் வைத்திருந்து விற்பனை செய்ய முடியும். **புதிய கோழி ரகங்கள்:** ஐதராபாத்தில் உள்ள கோழி திட்ட இயக்குனரகம் "கிராமப்பிரியா' (முட்டை ரகம்), "வனராஜா' (முட்டை மற்றும் இறைச்சி ரகம்) ஆகிய கோழி ரகங்களை உருவாக்கி உள்ளது. இவை பார்ப்பதற்கு நாட்டுக் கோழிகளைப் போல இருக்கும். அதிக எண்ணிக்கையில் முட்டையை இடக் கூடியவை. முதலில் இந்த குஞ்சுகள் தடுப்பூசி மற்றும் உரிய தீவனங் களுடன் அடைக்காலங்களில் 6 வார காலம் தொடர் செயற்கை வெப்பத்தில் பராமரிக்கப்படுகிறது. பின்பு தான் விவசாயிகளுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் அதிக எடையையும், அதிக முட்டையிடும் திறனையும் கோழிகள் பெறுகின்றன. அதாவது 1.5 ஆண்டில் "கிராமப்பிரியா' ரகக்கோழி 200 முதல் 230 முட்டைகளும், "வனராஜா' ரகக்கோழி 100 முதல் 110 முட்டைகளும் கொடுக்கின்றன. கோழிகளின் எடையும் 2.2 கிலோ வரை இருக்கிறது. இந்த இரண்டு கோழி இனங்களும் கோழி விதைத் திட்டத்தின் கீழ் தமிழக விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் தமிழ்நாட்டில் உள்ள கால்நடைப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன. இவை இரண்டும் பறக்கடையில் வளர்க்கவே வழங்கப்படுகின்றன. கோயம்புத்தூர் மண்டலத்துக்குட்பட்ட ஈரோடு, சேலம், நீலகிரி, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் கால்நடைப்பயிற்சி மையத்தில் இதற்கான முன்பதிவைச் செய்து கொள்ளலாம். மேலும் பத்து கால்நடை மருத்துவ அறிவியல், பல்கலைக்கழக

பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களிலும் இந்தக் கோழிக்குஞ்சுகளுக்கான முன்பதிவைச் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்புக்கு : இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கோயம்புத்தூர்-0422 - 266 9965.

வெண்டை ஹைபிரிடு OH.102 - வெள்ளை விழாத அதிக மகசூல் கொடுக்கக்கூடிய கோடைக்கு ஏற்ற வெண்டை ஹைபிரிடு பற்றிய விபரங்களுக்கு தொடர்பு முகவரி: Synqenta India Ltd. சரக அலுவலர்கள் - தேனி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், கன்னியாகுமரி, ராமநாதபுரம்- 95007 08707; சேலம், தர்மபுரி, நாமக்கல் - 94422 14885; திண்டுக்கல், திருச்சி, பெரம்பலூர் - 85086 37849.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**<u>அலங்கார மீன் வளர்க்க மத்திய அரசு தரும் அருமையான வாய்ப்புகள்</u>**



மீன் வளர்க்கவும், மீன் பிடிக்கவும், பதப்படுத்தி ஏற்றுமதி செய்யவும், பயிற்சி, கடனுதவி, மானியம் வழங்கி வந்த இந்திய அரசின் "கடல் பொருள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம்" இன்று அலங்கார மீன் வளர்க்கவும் மார்க்கெட் செய்யவும் ஏராளமான உதவிகள் செய்து வருகிறது. அலங்கார மீன் வளர்ப்பில் கிராமப் புறங்களில் ஏராளமான வேலை வாய்ப்புக்களை உருவாக்குகிறது. அலங்கார மீன் வளர்ப்போர், மார்க்கெட்டிங் கூட்டுறவு சங்கங்களுக்கு கட்டிடம், இதர பொருட்கள் வாங்க நிதி உதவி. உற்பத்தி, மார்க்கெட்டிங் மற்றும் ஏற்றுமதிக்கு உதவுதல் ஆகிய பணிகளை செய்கிறது. வருடத்திற்கு 60000 மீன் உற்பத்தி செய்வோருக்கு ரூ.75000, 1,60,000 மீன் உற்பத்தி செய்வோருக்கு ரூ.2 லட்சம் மற்றும் வருடத்திற்கு 5 லட்சம் மீன் உற்பத்தி செய்வோருக்கு ரூ.7.5 லட்சம், கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.5 லட்சமும் நிதி உதவி அளிக்கப்படும். சிமெண்ட், தண்ணீர் தொட்டி, கண்ணாடித்தொட்டி, தண்ணீர் சுத்தம் செய்யும் கருவிகள்

போன்றவற்றுக்கு வழங்கப்படும். தமிழ்நாடு அரசிடம் பதிவு பெற்ற "அலங்கார மீன் வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களுக்கு" ஏற்றுமதி செய்ய, மார்க்கெட் செய்ய நிதி உதவி வழங்கப்படும். ஆனால் இண்டர்நேஷனல் விமான நிலையத்தில் இருந்து 30 கி.மீ தொலைவுக்குள் ஏற்றுமதியாளர் இருக்க வேண்டும். இத்திட்டம் பற்றியும், இந்திய அரசு கடல் பொருள்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்க கொண்டு வந்துள்ள அனைத்து திட்டங்களையும் பற்றி அறிந்து கொள்ள உதவி இயக்குநர் (அலங்கார மீன் வளர்ச்சித் துறை) கடல் பொருள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம், MPEDA House, Panampally Avenue, Kochi682 036, Kerala. Ph: 0484 231 197. email: mpeda@mpeda.nic.in., www.mpeda.com. கிளை : துணை இயக்குநர், MPEDA, AH25, 4வது தெரு, 8வது மெயின் ரோடு, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை-40. போன்: 044 - 2626 9192. email : chempeda.vsnl.net. **- எம்.ஞானசேகர், தொழில் மற்றும் விவசாய ஆலோசகர் 93807 55629.**

<u>**ரூ.81.65 லட்சம் மதிப்பில்வேளாண் பொருட்கள் ஏலம்**</u>

அந்தியூர்:அந்தியூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நேற்று, அத்தாணி, கோபி, பருவாச்சி, எண்ணமங்கலம், புதுப்பாளையம், சங்கராப் பாளையம், கொளத்தூர், சென்னம்பட்டி, பர்கூர் உட்பட அந்தியூர் பகுதியில் இருந்து, தேங்காய், எள், நிலக்கடலை, மக்காச்சோளம், துவரை மற்றும் பருத்தி என விளை பொருட்களை, விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.மொத்தம், 28 ஆயிரம் தேங்காய், குறைந்த விலையாக, 4.70 ரூபாய்க்கும், அதிகப்பட்சமாக, 16.50 ரூபாய் என, 2.5 லட்சம் ரூபாய்க்கும், கொப்பரை தேங்காய், 70 மூட்டைகள், குறைந்த பட்ச விலையாக, 84.15 முதல், 99.09 ரூபாய் வரை, 3.6 லட்சம் ரூபாய்க்கும், வெள்ளை ரக எள், 100 மூட்டைகள், கிலோ ஒன்றுக்கு, 71.19 முதல், 88.49 ரூபாய் என, 4.5 லட்சம் ரூபாய்க்கும், மக்காச்சோளம், 100 மூட்டைகள் கிலோ ஒன்று, 12.89 முதல், 13.69 ரூபாய் வரை, 1 லட்சத்து, 30 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.கடந்த, புதன் கிழமை நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 700 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தது. பச்சை

கிலோ, 22.29 முதல், 28.01 ரூபாய் வரையும், காய்ந்தது, 44.31 முதல், 49 ரூபாய் வரை, 9 லட்சம் ரூபாய்க்கும், ஆமணக்கு, 10 மூட்டை, கிலோ ஒன்று, 36.39 முதல் 55.09 ரூபாய் வரை, 30 ஆயிரம் ரூபாய்க்கும், துவரை, 15 மூட்டைகள் குறைந்த பட்ச விலையாக, 36.19 ரூபாய்க்கும், அதிக விலையாக, 52.29 ரூபாய்க்கும் விற்பனையாகி, 45 ஆயிரம் ரூபாய்க்கு விலை போனது. கடந்த, வியாழக்கிழமை நடந்த பருத்தி ஏலத்துக்கு, பிடி ரக பருத்தி, 4,200 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு, குறைந்த பட்ச விலையாக, கிலோ ஒன்றுக்கு, 37 முதல், 42 ரூபாய் வரை, 60 லட்சத்துக்கும் ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தம், 81.65 லட்சத்துக்கு வேளாண் பொருட்கள் ஏலம் நடந்தது, என விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

## <u>விவசாய பொருட்களை மதிப்பு கூட்டி விற்பது அவசியம்</u>

ஊட்டி : 'விவசாயப் பொருட்களை மதிப்புக் கூட்டி விற்க வேண்டும்' என, அறிவுறுத்தப்பட்டது.தோட்டக்கலை துறை சார்பில், விவசாயிகளுக்கான கிராமப்புற பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதில், உல்லாடா கிராமத்தில் நடந்த பயிற்சியில், வேளாண்மை அலுவலர் ரமேஷ் பேசுகையில்,"வேளாண் வணிகத் துறையில், பல்வேறு மானிய திட்டங்கள் உள்ளன; அவற்றை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். விவசாயப் விளைப் பொருட்களை மதிப்புக் கூட்டி விற்பனை செய்வதன் மூலம், கூடுதல் வருமானம் பெற முடியும்," என்றார். பயிற்சி முகாமில் பங்கேற்ற, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், கல்வி சுற்றுலாவாக, உட்ஹவுஸ் பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு பண்ணையின் செயல்பாடுகள் மற்றும் ரோஸ் மேரி பயிரின் மருத்துவ குணங்கள் குறித்து, டாக்டர் ஆனந்த் விளக்கினார். பயிற்சியில், உதவி வேளாண் அலுவலர்கள் மோகன், மூர்த்தி, கிருஷ்ணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## காபி ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு இலவச பயிற்சி

தாண்டிக்குடி : விவசாயிகளுக்கு நன்மை செய்யும் உயிர் எதிர் பூஞ்சாணக் கொல்லி மற்றும் பாக்டீரியா உற்பத்தி செய்வது குறித்து விவசாயிகளுக்கு தாண்டிக்குடி காபி ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி வழங்கப்படுகிறது. உயிர் எதிர் பூஞ்சாணக் கொல்லி (டிரைகோ டிரைமா), உயிர் எதிர் பாக்டீரியா கொல்லி (சூடோமோனஸ்) இவை மண்ணில் தீங்கு விளைவிக்கூடிய பூஞ்சாணம் மற்றும் பாக்டீரியாக்களை அழித்து மண்ணை வளப்படுத்தி விவசாயிகளுக்கு உதவுகிறது. உலகில் 141 நாடுகளில் இம்முறை கடைப்பிடிக்கப்பட்டு இயற்கை முறையில் விவசாயத்தில் அதிக லாபம் ஈட்டப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. தாண்டிக்குடி காபி ஆராய்ச்சி நிலைய நோயியல் துறை நிபுணர் சவுந்தர்ராஜன் கூறியதாவது: ரேஷன் அரிசி, சோளம், காகிதம், வாழை இலை, காபி தோல் கழிவு, வேப்பம் புண்ணாக்கு, காய்ந்த பூக்கள், பலா விதை ஆகியவற்றின் மீது, "டிரைகோ டிரைமா' எனும் தாய்வித்தை நிழல் பராமரிப்பில் ஐந்து நாள் பரவி பராமரித்தால் அவை பல்கி பெருகும். உற்பத்தி செய்த பூஞ்சாணத்தை விதை நேர்த்தி, கன்றினை நனைத்தல், மண்ணில் தொழு உரத்துடன் இடலாம். இதற்கு நிலத்தை எப்போதும் ஈரப்பதமாகவே வைத்திருப்பது அவசியம்.சூடோமோனஸ்: ஊடகத்தில் வெல்லம் கலந்த குளுக்கோஸ், ஈஸ்ட், வடி தண்ணி ஆகியவற்றை தொற்று நீக்கி, தாய் வித்தை கலந்து உற்பத்தி செய்யலாம். இதை இலை, வேர் வழியாக பயன்படுத்த வேண்டும். மூன்று மாதத்திற்கு ஒரு முறை காபி ஆராய்ச்சி நிலையத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக பயிற்சியளிக்கப்படுகிறது. இவை காபி, மலை வாழை, மிளகு, ஆரஞ்சு, ஏலக்காய் பயிர்களில் அதிக மகசூலுக்கு உதவும் என்றார்.

## எள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

சின்னசேலம்: சின்னசேலம் பகுதிகளில் எள் செடிகள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சின்னசேலம் ஒன்றியத்தில் எலவடி, தொட்டியம், கடத்தூர், பங்காரம், பாண்டியங்குப்பம், மேல் நாரியப்பனூர் உள்ளிட்ட 50 கிராமங்கள் உள்ளன. பருவ மழையின்றி கிணற்று நீரை பயன்படுத்தி கரும்பு, மரவள்ளி, மக்கா சோளம், மஞ்சள் பயிரை பருவ காலத்தில் பயிர் செய்துள்ளனர். கோடை பருவம் துவங்கிய நிலையில் கிணற்று நீரளவு குறையத் துவங்கியது.

குறுகிய கால எள் பயிரை பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். 4 மாத பயிரான எள் செடி கடந்த ஜனவரி மாதம் விதைத்தனர். மாதத்திற்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினால் போதும். வறட்சியை நன்கு தாங்கக் கூடியது. ஏக்கருக்கு 7-9 மூட்டை வரை மகசூல் கிடைக்கிறது. அனைத்து செலவுகளும் போக ஏக்கருக்கு 30-40 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது. அதிக லாபம், குறைந்த செலவு, வறட்சி தாங்கக் கூடியது உள்ளிட்ட காரணங் களால் எள் செடியை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர் வம் காட்டி வருகின்றனர்.

## மண் மற்றும் நீரை பரிசோதிக்க விவசாயிகளுக்கு ஆலோசனை

பெரியகுளம் : பெரியகுளம் தாலுகா விவசாயிகள் மண் மற்றும் கிணற்று நீரை பரிசோதனை செய்து மகசூலை அதிகப்படுத்த வேளாண்மைத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது. பெரியகுளம் வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் பெரியகருப்பன் கூறியதாவது: பயிரின் தேவைக்கேற்ப உரமிடுவதற்கும், பயிர்களின் வளர்ச்சிக்கும் மண் உகந்ததா என்பதனை அறிந்து கொள்வதற்கு மண் மற்றும் பாசனநீரை பரிசோதனை செய்வது அவசியமான தாகும். விவசாயிகள் பயிரின் தேவைக்கேற்ப உரமிடும்பொழுது குறைந்த சாகுபடி செலவில் அதிகளவில் மகசூல் பெற்றிடலாம்.மண்ணில் உள்ள

தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துக்களின் அளவினை கணக்கிட்டு ஒரே சீராக உரமிடலாம். சிக்கனமான முறைகளில் உரங்களை பயிர்களுக்கு இட்டு உரச்செலவினை குறைந்திடலாம்.மண் மாதிரியில் விவசாயிகளின் பெயர், கிரமாம் சர்வே எண், பாசனவசதி, பயிரிடப்பட்ட முன் பயிர், அடுத்து பயிரிடப்போகும் பயிர் ஆகிய விபரங்களை அனுப்பவேண்டும். ஒரு மண் மாதிரிக்கு ரூ. 5 செலுத்தி மண் ஆய்வுக்கூடம், மண் பரிசோதனை செய்து கொள்ளலாம். பாசனநீரையும் சுத்தமான பாட்டிலில் 500 மி.லி.,யை ரூ.10 செலுத்தி ஆய்வு செய்து கொள்ளலாம், இதன் மூலம் விவசாயிகளுக்கு மகசூல் அதிகரிக்கும், என்றார்.

<u>விவசாய விளைபொருட்கள் உற்பத்தி இலக்கை விட 3 மடங்கு அதிகரிப்பு</u>

தேனி : தேனி மாவட்டத்தில் நடப்பு ஆண்டு விவசாய விளை பொருட்கள் உற்பத்தி 5 லட்சம் டன்னை கடந்துள்ளது. அரசு நிர்ணயித்த இலக்கை விட மூன்று மடங்கு, விளைச்சல் அதிகரித்துள்ளது என விவசாய இணை இயக்குனர் வெங்கடசுப்பிரமணி தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது: மாவட்டத்தில் கடந்த ஜனவரி, பிப்ரவரியில் மழை மிகவும் குறைவாக பெய்தது. இருப்பினும் கடந்த ஆண்டு பெய்த மழையால் கிணறுகளில் ஓரளவு நீர் ஊற்று கிடைத்து வருகிறது. மாவட்டத்தில் விவசாய சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது. நெல் 35 ஆயிரம் ஏக்கரிலும், சிறு தானியங்கள் 51 ஆயிரம் ஏக்கரிலும், பயறு வகைகள் 35 ஆயிரம் ஏக்கரிலும், எண்ணெய் வித்துக்கள் 10 ஆயிரத்து 500 ஏக்கரிலும், பருத்தி 7 ஆயிரம் ஏக்கரிலும், கரும்பு 14 ஆயிரம் ஏக்கரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மொத்தம் விவசாய பயிர்கள் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு ஒரு லட்சத்து 86 ஆயிரம் டன் விளைபொருள் எடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. ஆனால் மக்காச்சோளம் ஏக்கருக்கு 11 டன், கரும்பு ஏக்கருக்கு 140 டன் என விளைச்சல் எல்லா வகையிலும் அதிகரித்துள்ளதால் மாவட்டத்தின் மொத்த விளைச்சல் 5 லட்சம் டன்னை கடந்துள்ளது. இதனால் விளைச்சல் நல்ல முறையில் உள்ளது

என்பது உறுதியாகிவிட்டது. மாவட்டத்தில் இன்னும் மூன்று மாதங்களுக்கு தேவையான அளவிற்கு உரம் இருப்பு உள்ளது. விவசாயிகளுக்கு தரமான விதை, உரம், பூச்சி மருந்துகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, என்றார்.

## விவசாயிகளுக்குதொழில்நுட்ப பயிற்சி

நங்கவள்ளி: விவசாயிகளின் உற்பத்தி திறனை மேம்படுத்த, பயிர் சாகுபடி மற்றும் தொழில்நுட்பம் குறித்த, ஒருநாள் பயிற்சி முகாம், தாரமங்கலத்தில் நடந்தது.தாரமங்கலம் யூனியனில், 2,000 ஏக்கர் பரப்பளவில், எண்ணெய் வித்து பயிர்கள், சாகுடி செய்யப்பட்டு வருகிறது. தேசிய எண்ணெய் வித்து மற்றும், எண்ணெய் பனை இயக்கம் 2014-15 திட்டத்தின் கீழ், தாரமங்கலம் யூனியனில் விதைப் பண்ணை அமைக்கும், 30 விவசாயிகளுக்கு, எண்ணெய் வித்து பயிர் சாகுபடி மற்றும் தொழில் நுட்பம் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம், தாரமங்கலம் தொடக்கப்பள்ளியில் நடந்தது.தாரமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பன்னீர்செல்வம், வேளாண்மை அலுவலர் சாகுல்அமீத் உள்பட பலர் கலந்து கொண்டு, விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

## ரூ. 60 லட்சத்திற்குமஞ்சள் வர்த்தகம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,080 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 10,600க்கும், குறைந்த பட்சம், 8,339 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 8,369க்கும், குறைந்த பட்சம், 6,099 ரூபாய்க்கும் ஏலம்போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 22 ஆயிரத்து, 299க்கும், குறைந்த பட்சம், 11 ஆயிரத்து,889 ரூபாய்க்கும் ஏலம்

போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 60 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

**<u>கோடை வெயில் துவக்கம்இளநீர் விற்பனை அதிகரிப்பு</u>**

தர்மபுரி,:தர்மபுரி மாவட்டத்தில், கோடை வெயில் கொளுத்த துவங்கியுள்ளதால், இளநீர் விற்பனை அதிகரித்துள்ளது.தர்மபுரி மாவட்டத்தில், சில ஆண்டுகளாக பருவமழை ஏமாற்றி வருகிறது. தற்போது, கோடையின் தாக்கம் அதிகரித்து வருகிறது. சில நாட்களாக, வெயிலின் அளவு 95 டிகிரிக்கு மேல் கொளுத்தி வருவதால், பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். வாட்டி வரும் வெயிலில் இருந்து, உடல் நலத்தை பாதுகாத்து கொள்ள, இயற்கை பானமான இளநீர் விற்பனை களை கட்டியுள்ளது.தர்மபுரியை சேர்ந்த இளநீர் வியாபாரி ராமன் கூறியதாவது:தற்போது, இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில், இயற்கை பானமான இளநீர் குறித்து விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இதனால், அவர்கள் கோடை வெயிலில் இருந்து தங்களது உடலை பாதுகாத்து கொள்ள, இளநீரை ஆர்வமாக பருகி வருகின்றனர். இதனால், இளநீர் விற்பனை சூடு பிடித்துள்ளது.பாலக்கோடு, காரிமங்கலம், மாரண்டஹள்ளி ஆகிய பகுதிகளில் இளநீரை மொத்தமாக வாங்கி வந்து, தர்மபுரி பகுதியில், ஒரு இளநீர், 15 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம். போதிய மழையில்லாததால், இளநீர் கொள்முதல் விலை, கடந்தாண்டை விட தற்போது உயர்ந்துள்ளது. இளநீர் விற்பனை அதிகரிக்கும் போது, எங்களுக்கு வருமானம் சற்று அதிகரிக்கும்.

**<u>வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி</u>**

ராஜபாளையம் : விருதுநகர் மாவட்ட புதுவாழ்வு திட்ட பயனாளிகளுக்கு, ராஜபாளையம் கால்நடை பல்கலை பயிற்சி மையத்தில் வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஏழாயிரம்பண்ணை அருகே உள்ள சூரார்பட்டியை சேர்ந்த மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு மூன்றுநாள் பயிற்சி முகாம் நேற்று துவங்கியது. மைய தலைவர் கதிர்வேல், டாக்டர் சீனிவாசன் பயிற்சி அளித்தனர். வெள்ளாடு வளர்ப்பு, நோய் தடுப்பு முறை, உணவு வழங்கும் முறை

குறித்து விளக்கப்பட்டது. முகாமின் இறுதிநாளில் சாத்தூர் அரசு ஆட்டு பண்ணையில் செயல்விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>2,000 டன் பழங்கள் சேமிக்க நவீன கிடங்கு</u>



புதுடெல்லி : சேமிப்பு கிடங்கு வசதி போதுமான அளவு இல்லாததால் ஆண்டுக்கு 2 ஆயிரம் டன் பழங்கள் அழுகி வீணாகின்றன. இதை கருத்தில் சேமிப்பு கிடங்கு அமைக்க பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி முதற்கட்டமாக டெல்லி அருகே ஆசாத்பூரில் 21,600 டன் சேமிப்பு திறன் கொண்ட அழுகும் பொருட்களுக்கான குளிர்பதன சேமிப்பு கிடங்கை ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு நேற்று திறந்து வைத்தார். இந்த நவீன சேமிப்பு கிடங்கை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். இதன்மூலம் பழங்கள் அழுகுவது தடுக்கப்பட்டு, நல்ல விலைக்கு விற்கவும் விவசாயிகளுக்கு வாய்ப்பாக அமையும். பழங்களை பழுக்க வைக்கும் கிடங்கும் உள்ளது. விவசாயிகள் ரசாயனங்களை பயன்படுத்தி பழுக்க வைக்கும் முறையை கைவிட்டு இந்த கிடங்கில் பழுக்க வைக்கலாம். இதனால், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு பழங்களை ஏற்றுமதி செய்ய தடை இருக்காது என்று அமைச்சர் தெரிவித்தார். இதுபோன்று நாட்டின் பிற பகுதிகளிலும் சேமிப்பு, பழுக்க வைப்பதற்கான கிடங்குகள் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## <u>உலக வனநாள் விழிப்புணர்வு பேரணி</u>

திருவண்ணாமலை, : திருவண்ணாமலையில் உலக வனநாள் தினத்தை முன்னிட்டு வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் வனபாதுகாப்பு குறித்த

விழிப்புணர்வு பேரணியை டிஆர்ஓ பழனி கொடியசைத்து தொடங்கி வைத்தார். உலக வனநாள் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21ம் தேதி கொண்டாடப் பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு நேற்று முன்தினம் உலக வனநாள் தினம் கொண்டாடப்பட்டது. திருவண்ணாமலையில் உலக வனநாள் தினத்தையொட்டி பொதுமக்களுக்கு காடுகள் தீயால் அழிவதையும், வன விலங்குகளை பாதுகாப்பது குறித்து அரசு கலைக்கல்லூரி மாணவ, மாணவிகள் நடத்திய விழிப்புணர்வு பேரணியை டிஆர்ஓ பழனி கொடியசைத்து துவக்கி வைத்தார். காமராஜர் சிலை அருகே தொடங்கிய பேரணி நகரின் முக்கிய வீதிகளின் வழியாக சென்று அரசு கலைக்கல்லூரி அருகே நிறைவடைந்தது. பின்னர் அரசு கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட வன அலுவலர் ராஜேந்திரன், ஆர்டிஓ உமாமகேஸ்வரி, வனச்சரகர் மனேஷா மணவாளன், உதவி வன பாதுகாவலர் உதயகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கிராமப்புற விவசாயிகளுக்கு பயிற்சி

ஊட்டி, : தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு கிராமப்புபுற பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. குன்னூர் தாலுகா உல்லாடா கிராமத்தில் மானிய திட்டங்கள் குறித்த பயிற்சி முகாம் நடந்தது. முகாமினை, வேளாண் வணிக துறை வேளாண்மை அலுவலர் ரமேஷ் முகா மினை துவக்கி வைத்து பேசுகையில், வேளாண் வணிகத்துறையில் உள்ள மானியத் திட்டங்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் சந்தை யில் விற்பனை செய்வது குறித்தும், அதற்கு கிடைக் கும் விலை குறித்தும் விளக்கினார். விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக தயார் செய்து சந்தையில் விற் பனை செய்து லாபம் பெற வேண்டும், என்றும் அவர் வலியுறுத்தினார். தொடர்ந்து, ஊட்டி அருகேயுள்ள வுட் அவுஸ் பகுதியில் உள்ள தோட்டக்கலைத்துறை ஆராய்ச்சி நிலையம் பண்ணைக்கு விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர். அங்கு களப் பயிற்சி அளிக்கப்பட் டது. அங்கு,

உதவி பேராசிரியர் ஆன்ந்த் ரோஸ்மேரி மருத்துவ பயிர் குறித்து விரிவாக எடுத்து கூறினார். இப்பயிற்சியில், உதவி வேளாண்மை அலுவலர் மோகன், மூர்த்தி மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் கலந்துக் கொண்டு பயிற்சி அளித்தனர்.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

திருவெறும்பூர், : கோடை காலம் தொடங்குவதால், கால்நடைகளை கோமாரி நோய் தாக்கும் அபாயம் உள்ளது. அதை முன் கூட்டியே தடுக்கும் விதத்தில் தமிழக அரசின் உத்தரவுப்படி திருச்சி கோட்ட கால்நடைதுறை உதவி இயக்குநர் மருதராஜ் தலைமையில் துவாக்குடி நகராட்சி பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. திருவெறும்பூர் கால்நடை தலைமை மருத்துவர் மாசி, வாழவந்தான் கோட்டை மருத்துவர் ராமலிங்கம், உதவி மருத்துவர்கள் மாரிமுத்து, அசோக் மற்றும் உதவி மருத்துவர்கள், கால்நடைதுறை உதவி ஆய்வாளாகள், பராமரிப்பு உதவியாளர்கள் என 20 பேர் கொண்ட குழுவினர் துவாக்குடி பகுதியில் உள்ள 1,050 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர்.

## <u>மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சியை கட்டுப்படுத்தும் வழிமுறை</u>

சேதுபாவாசத்திரம், : மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளில் மிக முக்கியமானது தண்டு துளைப்பான், கதிர் துளைப்பான் மற்றும் வேர் கருகல் நூற்புழு ஆகும். தண்டு துளைப்பான் தாக்கிய பயிர்களில் இலை கள் சுரண்டப்பட்டிருக்கும், நடுக்குருத்து வாடி காய்ந்திருக்கும். தண்டில் துவாரம் காணப் படும். இவற்றை கட்டுப்படுத்த விதைத்த 16வது நாள் குயினல்பாஸ் 5 ஜி 6 கிலோ அல்லது கார்பரில் 4 ஜி 8 கிலோ குருணை மருந்தை 20 கிலோ மணலுடன் கலந்து ஒரு ஏக்கரில் உள்ள செடியின் நடுக்குருத்தில் இடவேண்டும். குருணை இட தவறும்பட்சத்தில் விதைத்த 20வது நாள் குயி னல்பாஸ் 25 இ.சி

400 மில்லி அல்லது கார்பரில் 50 சத நனையும் தூள் 400 கிராம் மருந்தை 200 லிட் டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்க வேண்டும். தண்டு துளைப் பான் மட்டுமின்றி மூக்குவ ண்டு மற்றும் அசுவினி பூச்சிகளும் கட்டுப்படுகிறது. வேர்கருகல் நூற்புழு தாக்கினால் இளம்செடிகள் கருகி காய்ந்துவிடும். இதை கட்டுப்படுத்த கார்போபியூரான் 3 ஜி குருணை மரு ந்து 12 கிலோவை ஒரு ஏக் கர் பரப்பில் நடவுகுழியில் விதையுடன் இடவேண்டும். கதிர் துளைப்பான் தாக்குதலால் பால் பருவமணிகள் சேதமடைந்திருக்கும். இதை கட்டுப்படுத்த கார்பரில் 10 சத மருந்து 10 கிலோ அல்லது கார்பரில் 50 சத நனையும் தூள் மருந்து 400 கிராம் இவற்றில் ஏதேனும் ஒன்றை பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் ஒரு ஏக்கரில் தெளிக்க வேண் டும். இவ்வாறு வேளாண் மை உதவி இயக்குநர் பெரி யசாமி தெரிவித்துள்ளார்.

## <u>வேளாண்துறை அலுவலகத்தில் தொழில் நுட்பக் கூட்டம்</u>

மயிலாடுதுறை, : மயிலாடுதுறை வேளாண் துணை அலுவலகத்தில் வேளாண்துறை மூலம் செயல்படுத்தப்படும் அட்மா திட்டத்தில் வட்டார தொழில்நுட்ப குழு கூட்டம் மற்றும் வட்டார ஆலோ சனை குழு கூட்டம் நடைபெற்றது. மயிலாடுதுறை வேளாண் மை உதவி இயக்குனர் நாராயணசாமி தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் லெட்சுமி நாராயணன் வரவேற்றார். ராமையன் முன்னிலை வகித் தார். மயிலாடுதுறை தோட்டக்கலை இயக்குனர் கணே சன், சிக்கல் வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர்கள் திலகம், வேளாண்மை அலுவலர் சுகந்தி, துணை வேளாண்மை அலுவலர் பிரபாகரன், பட்டு வளர்ச்சித்துறை ஆய் வாளர் சாந்தி, கால்நடை மருத்துவத்துறை குருமூர்த்தி மற்றும் மீன்வளத்துறை ஆய்வாளர் மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண் டனர். கூட்டத்தில் அட்மா திட்டத்தின் இலக்குகள் குறித்து ஆலோசிக்கப்பட் டது. இதில் அட் மா வட்டார விவசாய ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அட்மா உதவி தொழில்நுட்ப மேலா ளர் சத்யா நன்றி கூறினார்.

## கால்நடை மருந்தகம் திறப்பு

சோழவந்தான், : மதுரை மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் செயல்பட்டு வந்த கால் நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தி அரசு உத்த ரவு வெளியிட்டுள்ளது. இதையடுத்து சோழவந்தான் சட்டமன்றத்திற்குட்பட்ட மன்னாடிமங்கலத்தில் செயல்பட்டு வந்த கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப் பட்டது. இதன் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் சுப்பிரமணியன் தலைமை தாங்கி னார். கருப்பையா எம்.எல்.ஏ முன்னிலை வகித் தார். கால்நடை மண்டல துணை இயக்குனர் கோபிநாத் வரவேற்றார். கூட்டுறவு துறை அமைச்சர் செல்லூர் ராஜு புதிய கால்நடை மருந்தகத்தை திறந்து வைத்து பேசினார்.இதில் ஒன்றிய தலைவர் அன்னகளஞ்சியம், துணைமேயர் திரவியம், மாவட்ட கவுன்சிலர்கள் அய்யப்பன், செல்லப் பாண்டி, ஊராட்சி தலை வர் தங்கப்பாண்டி, தாசில் தார் ராம்குமார், கால்நடை உதவி இயக்குனர் பன்னீர், கூட்டுறவு சங்க இயக்குனர் மூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

பழநி, : பழநி அருகே அமரபூண்டியில் எண்ணெய் வித்து பெருக்குத் திட்டம் 2014-15ன் கீழ் ஆதிதிராவிட விவசாயிகளுக்கான பயிற்சி நடந்தது. மாவட்ட துணை வேளாண் இயக்குநர் தங்கச்சாமி முன்னிலை வகித்தார். பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி திட்ட விளக்க உரையாற்றினார். வாகரை மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் அறிவுடைநம்பி நிலக்கடலை மற்றும் சூரியகாந்தி பயிர்களில் கடைபிடிக்கப்பட வேண்டிய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து எடுத்துரைத்தார். பயிற்சி முகாமில் சொட்டு நீர் பாசன முறை, நுண்ணீர் பாசன முறை, நிலக்கடலையில் ஜிப்சம் இடுவதால் ஏற்படும் நன்மை, விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படும் வேளாண் இடுபொருட்கள், உயிர் உரங்களின் அவசியம், உயிரியல் பூஞ்சான் கொல்லிகளின் பயன்பாடுகள் மற்றும் மானியங்கள் குறித்து

எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் சசிக்குமார், துணை வேளாண் அலுவலர் துரைச்சாமி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## கால்நடை மருத்துவ முகாம்

திருச்சுழி, : திருச்சுழி அருகே, எம்.மீனாட்சி புரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலான்மை முகாமை விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ், சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. வேளாண்மை பல்கலைக்கழக உதவி பேராசிரியர் கதிர்வேலன் தலைமை தாங்கினார். இம்முகாமில், கிராம விவசாயிகளின் ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தல், உண்ணி பேன் சுத்தம் செய்தல், காய்ச்சல் போன்ற நோய்களுக்கு முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டது. ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்வதன் அவசியம் மற்றும் முக்கியத்துவம் குறித்து கால்நடை உதவிப் பேராசிரியர் எடுத்துரைத் தார். கிராமத்தில் உள்ள 200 வெள்ளாடுகளுக்கும் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. இம்முகா மை அட்மா பணியாளர் கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## ஆனைமலை வட்டாரத்தில் நெல் அறுவடை செய்யும் பணி தீவிரம் எந்திரம் பற்றாக்குறையால் விவசாயிகள் அவதி



ஆனைமலை வட்டாரத் தில் நெல் அறுவடை தீவிரமடைந்துள்ளது. ஆனால் அறுவடை எந்திரம் பற்றாக்குறையாக உள்ளதால் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.

நெல்அறுவடை

ஆனைமலை வட்டாரத்தில் விவசாயம் முதன்மைத் தொழி லாக உள்ளது. ஆனை மலை பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதியில் குறுவை மற்றும் சம்பா நெல் சாகுபடி அதிக ளவில் நடைபெற்று வருகிறது. கடந்த டிசம்பர் மாதம் சம்பா நெல் சாகுபடி தொடங்கியது. இதையடுத்து களை எடுத்தல், உரமிடுதல், கலப்பின பயிர் களை அகற்றுதல் உள் ளிட்ட பணிகளை விவசாயிகள் ஆர் வத்துடன் மேற்கொண்டனர்.தற்போது நெற்கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயார் நிலைக்கு வந்து உள்ளது. இதனால் நெல் அறுவடை செய்யும் எந்திரம் மூலம் அறுவடை பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

எந்திரம்பற்றாக்குறை

இதுகுறித்துவிவசாயிகள்கூறியதாவது:-

2-ம் போக சம்பா சாகுபடி யில் ஏ.டி.ஆர். 45 ரக நெற் பயிர்களை சாகுபடி செய்திருந் தோம். கூலி ஆட்கள் பற்றாக் குறை உள்ளது. இதனால் நெல் அறுவடை செய்யும் எந்திரம் மூலம் அறுவடை பணி நடைபெற்று வருகிறது. ஆனால் நெற் கதிர்கள் முற்றிய நிலையில் அறுவடை செய்ய எந்திரம் பற்றாக்குறையாக உள்ளதால் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். இதனால் எந்திரம் கிடைக்காமல் குறித்த நேரத்தில் அறுவடை செய்ய முடியாமல் எந்திரத்திற்காக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு குறுவை சாகுபடிக்கு வேளாண் பொறி யியல் துறை மூலம் நெல் அறுவடை எந்திரம் அனுப்பப் பட்டது. இதனால் குறைந்த வாடகையில், குறிப்பிட்ட காலத்தில் அறுவடைசெய்ய முடிந்தது. எனவே இந்த பருவத்திற்கும் அரசு நெல் அறுவடை எந்திரம் கொண்டு வர மாவட்ட நிர்வாகம் ஏற் பாடு செய்து தர வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## <u>வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் 400 மூட்டை மஞ்சள் ரூ.20 லட்சத்துக்கு ஏலம்</u>

சேலம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 400 மூட்டை மஞ்சள் ரூ.20 லட்சத்துக்கு விற்பனை ஆனது. 400 மூட்டை மஞ்சள் வரத்து சேலம் பள்ளப்பட்டியில் உள்ள வேளாண்மை

உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் விவசாயிகள் உற்பத்தி பொருட்களான பருத்தி, நிலக்கடலை, மஞ்சள் ஆகியவை ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டு விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவருகிறது.

கடந்த 3-ந் தேதி முதல் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு விவசாயிகள் சாகுபடி செய்த புதிய மஞ்சள் விற்பனைக்கு வரத்தொடங்கியது. அதைத்தொடர்ந்து வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை அன்று விவசாயிகள் மஞ்சள் மூட்டையை ஏலத்தில் விற்பனை செய்ய கொண்டுவர தொடங்கி விட்டனர். நேற்று 400 மூட்டை மஞ்சளை விவசாயிகள் கொண்டுவந்தனர்.

விலைநிர்ணயம்

சேலம், அயோத்தியாப்பட்டணம், நாட்டாமங்கலம், வாழப்பாடி, குப்பனூர், வீரபாண்டி, பனமரத்துப்பட்டி, ஓமலூர், கஞ்சநாயக்கன்பட்டி, தீவட்டிப்பட்டி, மேச்சேரி ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் 400 மூட்டை மஞ்சளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். அங்கு 100 கிலோ எடைகொண்ட விரலி மஞ்சள் மூட்டையின் அதிக பட்ச விலை ரூ.10,600 என்றும், குறைந்த பட்ச விலை ரூ.8,700 என்றும் நிர்ணயிக்கப்பட்டது. குண்டு மஞ்சள் அதிக பட்ச விலை ரூ.8,600 என்றும், குறைந்த பட்ச விலை ரூ.6,700 என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

ரூ.20லட்சத்துக்குவிற்பனை

பனங்காலி மஞ்சள் அதிக பட்சவிலை ரூ.18,000 என்றும், குறைந்த பட்ச விலை ரூ.13,400 என்றும் நிர்ணயிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டது. மஞ்சள் மூட்டை களை ஏலம் எடுப்பதற்காக சேலம், ஈரோடு, ராசிபுரம், அரூர், ஆத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள வியாபாரிகள் வந்திருந்தனர். 400 மூட்டை மஞ்சளும் ரூ.20 லட்சத்திற்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## 6,600 ஏக்கரில் விதைநெல் பண்ணைகள் அமைக்கப்படுகிறது விதைச்சான்று உதவி இயக்குனர் தகவல்



நடப்பு கோடை, குறுவை பருவத்தில் 6,600 ஏக்கரில் விதைநெல் பண்ணைகள் அமைக்கப்படுகிறது என்று விதைச்சான்று உதவி இயக்குனர் கூறி உள்ளார்.

விதைநெல்உற்பத்திபயிற்சி

தஞ்சை மாவட்ட விதைச்சான்றுத்துறை சார்பில் தனியார் விதை உற்பத்தியாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கான தரமான விதைநெல் உற்பத்தி பயிற்சி தஞ்சையில் நடந்தது. இதில் தஞ்சை மாவட்டத்தில் விதைப்பண்ணைகள் அமைத்து உற்பத்தி செய்யும் தனியார் விதைநெல் உற்பத்தியாளர்கள், விவசாயிகளை ஒருங்கிணைத்து கொடுக்கும் விதை ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்த பயிற்சி முகாமில் தஞ்சை விதைச்சான்று உதவி இயக்குனர் மணிமாறன் கலந்து கொண்டு பேசியதாவது:-

விதைச்சான்று நடைமுறைகளை முறையாக பின்பற்றி தரமான சான்று விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும். விதைப்பு அறிக்கை பதிவு செய்கையில் சரியான விதைப்பு தேதியை குறிப்பிட்டு விதைப்பண்ணையில் பதிவு மேற்கொள்ள வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் விதை உற்பத்தி செய்யப்பட்டு பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லும் விதைநெல் குவியல்களை உரிய ஆவணத்துடன் எடுத்துசெல்ல வேண்டும். தவறினால் கடும் நடவடிக்கைஎடுக்கப்படும்.

விதைப்பண்ணைகள்

மேலும் கோடை, குறுவை, சம்பா, தாளடி பருவத்திற்கான விதைத்தேவையை முன்கூட்டியே திட்டமிட்டு போதிய அளவிலான சான்று விதைப்பண்ணைகளை அமைத்து விதை உற்பத்தி பணிகளை மேற்கொள்ள வேண்டும். தனியார் விதை உற்பத்தியாளர் சார்பாக நடப்பு கோடை மற்றும் குறுவை பருவத்தில் 6,600

ஏக்கரில விதைநெல் பண்ணைகள் அமைக்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.